சி.சி. 34/2025.
ம.சா. 3 ஆறுமுகம்
த/பெ. பாக்கியராஜ்
04.02.2026
சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1.நான் பேட்டரி கடை வைத்துள்ளேன். நான் காசிராஜ் என்பவரிடம் ரூ.5,00,000/– பணம் கொடுத்ததற்கு ஏதேனும் ஆவணங்கள் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் கடனுறுதி சீட்டு வாங்கியுள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த பணத்தை தற்போது வரை காசிராஜன் கொடுக்காததால் அவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரூ.5,00,000/– பணத்தை காசிராஜன் தன்னுடைய குடும்ப அவசர தேவைக்காக வாங்கிவிட்டு 15 நாட்களில் பணம் தருவதாக கூறினார் என்றால் சரிதான். மேற்படி பணத்தை எனது குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் கத்தாளம்பட்டியில் வைத்து கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் கொடுத்ததாக சொல்லக்கூடிய பணத்தை காசிராஜன் எந்த வகையில் செலவு செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். பேட்டரி கடை மூலம் மாதம் ரூ.10,000/– முதல் ரூ.15,000/– வரை வருமானம் கிடைக்கும் என்றால் சரிதான். அந்தவகையில் வருடத்திற்கு எனக்கு ரூ.1,50,000/– வருமானம் கிடைக்கும் என்றால் சரிதான். நான் தனியாக விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான். பேட்டரி கடை போக வேறு எதும் வருமானம் எனக்கு கிடையாது என்றால் சரிதான். எனது 2 குழந்தைகளும் கத்தாளம்பட்டி அரசு பள்ளியில் படிக்கிறார்கள். எனது குடும்ப செலவு மாதம் ரூ.10,000/–

வரை செலவாகும் என்றால் சரிதான். நான் வருமான வரி கட்டுகிறேனா என்றால் இல்லை. வட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி காசிராஜனுக்கு ரூ.5லட்சம் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ரூ.5லட்சம் பணம் கொடுக்கும் அளவிற்கு எனது வருமானம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை தீவிரபடுத்தவேண்டும் என்று ரூ.5 லட்சம் காசிராஜனுக்கு பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக ரூ.2லட்சத்திற்கு மேல் பணம் கொடுத்தால் வங்கி பரிவர்த்தனை மூலமாகதான் கொடுக்கமுடியும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.